தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபதாவது அறிக்கை

வேலூர் மாவட்டம்

(மாவட்ட பட்டியல்)

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 29 FEB 2008)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபதாவது அறிக்கை

வேலூர் மாவட்டம்

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்:)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

53-403—1

பொருளடக்கம்

பக்கங்கள்

குழுவின் அமைப்பு iii

அறிக்கை

1. முகவுரை v

2. குழுவின் கூட்டங்கள் v

3. பொதுக் குறிப்புரைகள் viii

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும் / படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

   வேலூர் மாவட்டம் (மாவட்டப் பட்டியல்) 1–49

இணைப்பு–2

2. குழுவின் பரிந்துரை 50

இணைப்பு–3

3. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் 51

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு
(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. சு. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (லால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	..	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	..	கூடுதல் செயலாளர்
திரு. தி. கோவிந்தராசு	..	துணைச் செயலாளர்
திருமதி து. இராஜேஸ்வரி	..	சார்புச் செயலாளர்

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபதாவது அறிக்கை

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

2. குழு 2007–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்தில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டது. அவ்வமயம் வேலூர் மாவட்டத்திலுள்ள மீன் மார்க்கெட், பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம், வேலூர்–காட்பாடிக்கும் குறுக்கேயுள்ள உடைந்த பாலம், மாதனூர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, ஆம்பூர் அரசு மருத்துவமனை, ஆம்பூர் சூரா லெதர்ஸ், ஆம்பூர் டெக் பொது சுத்திகரிப்பு நிலையம், வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரியூர் கூட்டுறவு நூற்பாலை, அரசினர் பெட்லாண்ட மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், மேல்விசாரம், ஆற்காடு பேருந்து நிலையம், ஆற்காடு தாலுக்கா மருத்துவமனை, பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவர் விடுதி ஆற்காடு, ராணிடெக் பொது சுத்திகரிப்பு நிலையம், இராணிப்பேட்டை, வாலாஜா அரசு மருத்துவமனை, கால்நடை தொற்று நோய் தடுப்பு மருந்துநிலையம், இராணிப்பேட்டை ஆகிய இடங்களை பார்வையிட்டது.

3. மேற்சொன்ன மாவட்டத்தில் குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது பேரவையில் அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய 177 உறுதிமொழிகள் மீதான அறிக்கைகளை குழு ஆராய்ந்து அவற்றில் 41 உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவாகவும், 7 உறுதிமொழிகளுக்கான பதில்களை படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும், 1 உறுதிமொழி மீது பரிந்துரை செய்யப்பட்டதாகவும், எஞ்சியுள்ள 128 உறுதிமொழிகள் மீது நடவடிக்கைத் தொடரலாம் என்றும் குழு முடிவு செய்யப்பெற்றது.

4. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1–இல் உள்ளன. குழுவின் பரிந்துரைகள் இணைப்பு–2–இல் உள்ளன. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–3–இல் உள்ளன.

குழுவின் ஆய்வுப் பயணங்கள்

5. கீழ்க்காணும் உறுதிமொழிகள் தொடர்பாக குழு 2007–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் வேலூர் மாவட்டத்தில் ஆய்வுப்பயணம் செய்து உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவா என்று பார்வையிட்டதுடன் அவ்வுறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது. குழு நேரடியாக பார்வையிட்ட சில உறுதிமொழிகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:–

1. உறுதி மொழி எண்.606/2000 மற்றும் 69/2001 : வேலூருக்கும் காட்பாடிக்கும் குறுக்கே இருக்கக்கூடிய உடைந்த பாலத்தை சரிசெய்வது குறித்து.

வேலூருக்கும் காட்பாடிக்கும் குறுக்கே இருக்கக்கூடிய உடைந்த பாலத்தை பார்வையிடச் சென்றது. அப்போது திரு. பாலசுப்ரமணியன், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) அவர்கள் குழுவினை வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

பாலாற்றின் குறுக்கே வேலூருக்கும், காட்பாடிக்கும் இடையே கட்டப்பட்டிருந்த பழைய பாலம் உடைந்து போனதால் அந்த இடத்தில் புதிய பாலம் கட்டும் பணி மத்திய அரசின் பன்மாநில பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் 2005–2006–ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 10.08.2007 அன்று 13.41 கோடி மதிப்பீட்டிற்கு மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், 12.10.2007 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்றும், ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெற்றவுடன் இப்பாலப்பணி தொடங்கும் என்றும் தெரிவித்தார். இது குறித்து குழு கருத்து தெரிவிக்கையில் இந்தப்பாலத்தின் மேற்புறம் மின்சார கம்பங்கள் செல்வதால், அது வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் என்கிற காரணத்தினால், அதனை மாற்றியமைக்க செயற்பொறியளார் தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொள்கிறதென்றும், இப்பணியின் தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பிவைக்க வேண்டுமென்றும் கோட்டப்பொறியாளர் அவர்களை குழுக் கேட்டுக்கொண்டது.

2. உறுதி மொழி எண்.107/2001 : வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காத தொழிற்சாலைகளை மூடுவதற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் நோட்டீஸ் அனுப்பியது குறித்து மாவட்ட கற்றுச்சூழல் பொறியாளர் அவர்களிடம் விளக்கம் கோருதல்.

குழு ஆம்பூரிலுள்ள திருவாளர்கள் சுரா லெதர்ஸ் என்ற தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுநீரை அத்தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்தில், சுத்திகரிப்பு செய்வதை பார்வையிடச் சென்றபோது தொழிற்சாலையின் உரிமையாளர் திரு. மனோகர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு. காமராஜ் ஆகியோர் குழுவினை வரவேற்று கீழக்கண்டவாறு குழுவிற்கு விளக்கினர்.

தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுத்திகரிப்பு செய்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தொழிற்சாலையின் சொந்த நிலத்தில் மரம் வளர்க்க பயன்படுகிறதென்றும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கரைந்துள்ள திடப்பொருள்கள் (டி.டி.எஸ்) வாரியம் அனுமதித்துள்ள 2,100 மி.கி/லி என்கிற அளவைவிட கூடுதலாக உள்ளதென்றும், வாரியம் நிர்ணயத்துள்ள தரத்தை அடைய எதிர்மறை சவ்வூடு பரவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டதால் தற்போது எதிர்மறை சவ்வூடு பரவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயங்கி வருகிறதென்றும் இதன் செயல்பாடுகள் குறித்து மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து குழு கருத்து தெரிவிக்கையில் தொழிற்சாலை வெளியேற்றுகிற கழிவுநீர் முழுமையான அளவில் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேருவதில்லையென்றும் சில தொழிற்சாலைகளில் கழிவுநீரை அப்படியே பாலாற்றில் விட்டுவிடுவதாகவும் தெரியவருகிறது என்றும் அதற்கு காரணம் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் பல லட்ச ரூபாய் அளவிற்கு மின்சார கட்டணம் மிச்சமாகிறது என்றும் அதனால் அத்தொழிற்சாலைகள் கழிவுநீரை பாலாற்றிலே விட்டுவிடுவதாக தெரிகிறது. டி.டி.எஸ்–ன் அளவு 2,100 இருக்க வேண்டுமென்றால் அங்கே வெளியேறும் கழிவுகளை அது 9,000, 10,000 என்ற அளவிற்கு இருக்கிறது. எனவே, இதை மாசு கட்டுபாடு வாரிய அதிகாரிகள் கண்காணிக்க வேண்டுமென்று குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது என்றும் இது குறித்து குழுவின் அடுத்தக்கூட்டம் சென்னையில் நடக்கும்போது மாசு கட்டுபாடு வாரியத் தலைவர் மற்றும் அரசுச் செயலாளர் ஆகியோர்களை நேரில் அழைத்து தக்க பரிந்துரைகளை அளிக்கும் என முடிவு செய்தது.

3. உறுதி மொழி எண். 320/2002 : வேலூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் தொடங்குவதற்கோ அல்லது வேறு எதாவது முறையில் பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுப்பது குறித்து.

குழு மூடப்பட்டுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை பார்வையிடச் சென்றபோது கூட்டுறவுத்துறை இணை இயக்குநர் திரு.வி.டி. மாணிக்கம், அவர்கள் குழுவினை வரவேற்றார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.கே. இராஜா, அவர்கள் குழுவின் ஆய்வுப் பயணத்தின்போது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்த ஆலையை மீண்டும் திறந்து நடத்த வேண்டுமென்ற உறுதிமொழிக்கேற்ப குழு இந்த ஆலையைப் பார்வையிட்டது. இங்கே இருக்கின்ற கட்டடங்கள் நல்ல நிலையில் இருக்கிறதென்றும், இந்த ஆலையை 9 கோடி ரூபாய்க்கு துறை ஏலம் விட்டதாகவும், இப்போது அந்த ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது என்றும் வேலூர் நகரத்தை ஒட்டி 52 ஏக்கரில் அமைந்துள்ள இந்த ஆலை பலகோடி ரூபாய்க்கு மதிப்புள்ளது என்றும் தெரியவந்துள்ளது. எனவே நலிந்தும்போன கூட்டுறவுச் சங்கங்களை புனரமைக்கின்ற வகையில் ஏதாவது ஒரு வகையில் அரசினுடைய உதவிப்பெறுகின்ற நிலையில் இதற்கு மறுவாழ்வு அளித்திட வேண்டுமென்று குழு அரசுக்கு பரிந்துரை செய்வதோடு இந்த ஆலையின் கட்டிடங்கள் எல்லாம் வலிமையுடனும், பொலிவுடனும் இருக்கின்ற காரணத்தினால் இதைப் புனரமைத்து இந்த ஆலையை மீண்டும் இயங்குவதற்கும் அதன் வாயிலாக பலநூறு தொழிலாளர் குடும்பங்களுக்கு மீண்டும் மறுவாழ்வு கிடைப்பதற்கும் அரசு ஆவன செய்யவேண்டுமென்றும் அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

4. உறுதி மொழி எண்.580/2003 : வேலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க. மூன்று ஆண்டுகளுக்கு முன் அரசு ஆணை பிறப்பித்தும் இதுவரை பேருந்து நிலையம் கட்டப்படாதது குறித்து.

புதிய பேருந்து நிலையத்தினை பார்வையிடச் சென்றபோது வேலூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சிகளின் மண்டல இயக்குநர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள், குழுவினை வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்:—

பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுவிட்டதென்றும் கட்டிடங்கள் எதுவும் கட்டப்படவில்லையென்றும் நகராட்சிக்கு பேருந்து நிலையத்தை ஒப்படை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும், உடனடியாக கட்டிடம் கட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நகராட்சியிலிருந்து 5 கோடி ரூபாயும், நகர ஊரமைப்புத் துறையிடமிருந்து 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து குழு கருத்து தெரிவிக்கையில் வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தற்போதைய நிலை என்ன என்று வினவியதற்கு ரிட் பெட்டிசன் இன்னும் நிலுவையிலே இருக்கிறதென்றும், ஜாயின்ட் சிட்டி உட்கார்ந்து பேசி விரைவாக இந்தப் பிரச்சினையை முடிக்க இருக்கிறோம் என்று நகராட்சிகளின் மண்டல இயக்குநர் தெரிவித்தார். இது குறித்து மாவட்ட ஆட்சியர், நகரமன்றத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உட்கார்ந்து பேசி இறுதி முடிவினை எடுக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது.

5. உறுதி மொழி எண். 904/2003 : வேலூர் மாவட்டம், வேலூர் நகராட்சி மீன்மார்க்கெட் கழிவுகளை நகரில் பைப்பாஸ் ரோட்டில் சேர்த்து வைத்து உரமாக்கும் இடத்தில் துர்நாற்றம் அதிகமாக ஏற்பட்டு சுகாதார கேடு விளைவிப்பதால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து.

நகராட்சிக்கு சொந்தமான மீன்மார்க்கெட் பகுதிக்கு குழு சென்றபோது குழுவினரை வேலூர் நகராட்சித் தலைவர் திரு. கார்த்திகேயன், துணைத் தலைவர் திரு. முகமது சாதிக், நகராட்சி மண்டல இயக்குநர் திருமதி ஜெயலட்சுமி, சுகாதார அலுவலர் திரு. செல்வ விநாயகம் மற்றும் நகரசபை பொறியாளர் திரு. தேவக்குமார் ஆகியோர் வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினர். குழுவின் ஆய்வுப் பயணத்தின்போது வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

மீன்மார்க்கெட் கழிவுகளை தினந்தோறும் எக்ஸ்னோரா அமைப்பின்மூலம் வெளியேற்றப்படுகிறதென்றும், தினந்தோறும் ஒரு டன் அளவிற்கு கழிவுகள் அகற்றப்படுகிறதென்றும் தெரிவித்தனர். இப்பகுதியினை சுகாதாரமான முறையில் பராமரித்திட நகராட்சி மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி சுகாதார அலுவலர் ஆகியோர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், மீன் வியாபாரிகள் தங்கள் பகுதியை சுத்தமாக வைத்துக்கொள்ளும்படி குழுக் கேட்டுக்கொண்டது.

5. உறுதி மொழி எண்.273/2004 : இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தை தடுப்பு மருந்துகள் தயாரிக்கும் ஆய்வகங்கள் சர்வதேச தரத்திற்கு நிகராக மாற்றப்படுவது குறித்து.

குழு இராணிப்பேட்டை கால்நடை தொற்றுநோய் தடுப்பு மருந்து நிலையத்தை பார்வையிட சென்றபோது அதன் இயக்குநர் டாக்டர் எ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் இதர அலுவலர்கள் வரவேற்றனர்.

இது குறித்து குழு அந்நிறுவனத்தை பார்வையிட்டபோது 1.5 கோடி லெவில் புனரமைப்பு செய்து சர்வதேச தரத்திற்கு இந்த கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தை தரம் உயர்த்த வேண்டும் என்கிற உறுதிமொழியை ஒட்டி ஆய்வுச் செய்தபோது இந்த நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் 391 பேர்கள் என்றும் தற்போது 156 பேர்கள் மட்டுமே பணிபுரிவதாகவும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நிறுவனம் 1932–ஆம் ஆண்டு துவங்கப்பட்டு பின்னர் கோயம்பத்தூருக்கு மாற்றப்பட்டு, திரும்பவும் 1948–ஆம் ஆண்டு முதல் இராணிப்பேட்டையில் இயங்கிவருவதாகவும் 124 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருப்பதாக இயக்குநர் தெரிவித்தார்.

இங்கு பல்வேறு வகையான சர்வதேசத் தரத்திற்கு இணையான உயிர் காக்கும் மருந்து தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தற்போது 1.5 கோடி ரூபாய் லெவலில் புனரமைப்பு செய்யப்பட்டது என்றும் இதர பராமரிப்பு பணிகளுக்கான 24 இலட்சம் ரூபாய்க்கான மதிப்பீடு தயார் செய்து முதன்மை பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் தெரிவித்தார். இது குறித்து குழுத் தலைவர் தெரிவிக்கையில் உலக அளவிலும், இந்திய அளவிலும் தரம் வாய்ந்த ஆராய்ச்சி நிறுவனமாக விளங்குவதற்கு ஏதுவாக இங்கு காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது என்றார்.

6. உறுதி மொழி எண்.570/2006 : வேலூர் மருத்துவக் கல்லூரியில் நோயைக் கண்டறியும் நவீன எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியை ஏற்படுத்துவது குறித்து.

குழு அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பார்வையிடச் சென்றபோது மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி ஜெயந்தி மற்றும் அலுவலர்கள் வரவேற்றனர்.

இது குறித்து குழு மருத்துவக் கல்லூரி குழந்தைகள் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகிய பகுதிகளைப் பார்வையிட்ட போது அப்பகுதிகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதற்காக மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் அலுவலர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொண்டது. பின்னர் மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியைப் பார்வையிட்ட குழு தொழில்நுட்ப வல்லுநர்கள் இல்லாத காரணத்தால் அந்தக் கருவி இயக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதென்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டபோது, இது குறித்து உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் பணியாளர்களை நியமித்து உடனடியாக அந்தக் கருவியை பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் மருத்துவத்துறை இணை இயக்குநர் ஆகியோர்களை குழு கேட்டுக்கொண்டது. மேலும், மருத்துவமனை வளாகத்தில் நிறைய குப்பைக்கூளங்கள் தேங்கி கிடப்பதைக் கண்டக் குழு, மருத்துவமனை அலுவலர்கள் பொதுப் பணித்துறை மற்றும் நகராட்சித் துறையினர் ஆகியோர் இணைந்து மருத்துவமனை வளாகத்தில் ஒரு மாஸ் கிளினிங்கிற்கு ஏற்பாடுசெய்து மருத்துவமனை மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று குழு கேட்டுக்கொண்டது.

பொதுக் குறிப்புரை

5. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

6. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை–600 009.
29 சனவரி 2008,
தை 15,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்,
தலைவர்,
அரசு உறுதிமொழிக் குழு.

சத்யமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

வேலூரில் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு அரசாணை பிறப்பித்து இன்னும் தொடங்கப்படாதது குறித்து

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	210/1998, 884/1999, 68/2001, 127/2001, 114/2002, 7/2004
4.	பொருள்	:	வேலூரில் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு அரசாணை பிறப்பித்து இன்னும் தொடங்கப்படாதது குறித்து.
5.	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்		
	நாள்	:	06-02-2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் துறை நல்வாழ்வுத் அமைச்சர் ....கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	ஆசு வேலூர் மருத்துவக் கல்லூரி தொடங்க அரசு ஆணை எண் 257/ககா. நாள்: 26-07-2000–ல் அனுமதிக்கப்பட்டது. அதனை அடுத்து வேலூர்-11 (அடுக்கம்பாறையில்) உருக்கிநோய் நலநிலைய வளாகத்தில் மருத்துவக் கல்லூரி நிறுவ நிதி மற்றும் கட்டிடங்கள் அமைக்க இசைவாணைகள் பெறப்பட்டு 08-12-2004 முதல் மருத்துவக் கல்லூரி திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 01-08-2005 முதல் 100 மாணவர்கள் முதலாண்டு எம்.பி.பி.எஸ். வகுப்பில் சேர்க்கப்பட்டனர். தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் 100 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். தற்போது மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இயங்கிவருகின்றது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

வேலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்து

1.	வரிசை எண்.	:	2
2.	துறையின் பெயர்	:	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
3.	உறுதிமொழி எண்.	:	468/1999 (ம) 31/2001
4.	பொருள்	:	வேலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்து.
5.	உள்ளாட்சித் துறை மானிய கோரிக்கையின் மீது அமைச்சரின் பதிலுரை		
	நாள்	:	12.05.1999
6.	உறுப்பினர் பெயர்		
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி (ம) ஊள்ளாட்சித் துறை அமைச்சர்
			....செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்த ஆண்டு பணி துவங்கப்பட்டு, வேலூர் நகராட்சிக்கு சொந்தமான அந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	மாண்புமிகு அமைச்சர் உறுதிமொழி வழங்கியவாறு வேலூர் நகராட்சி பகுதியில் புதிய பேருந்து நிலையம், அரசாணை (புத்தாண்டு) எண் 503, நாள்: 28-10-99-ன் படியும் அரசாணை எண் (நிலை) 49 நாள்: 29-03-05-ன் படியும், புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு விட்டது. கடந்த 25-06-2005-ம் நாள் முதல் புதிய புறநகர் நீண்ட வழிதட பேருந்துகளுக்கு பேருந்து நிலையம் புதிதாக உருவாக்கப்பட்டு வேலூர் உள்ளூர் திட்ட குழுமத்தால் பாமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பழைய பேருந்து நிலையம் வேலூர் நகர பேருந்து நிலையமாக மாற்றி செயற்பாட்டில் உள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

வேலூர் மாவட்டம் ஆம்பூரிலே இறந்து விட்ட இரண்டு வணிகர்களுக்கு ரூ.50,000/– ஈட்டுத் தொகை வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	3
2.	துறையின் பெயர்	:	வணிகவரித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	135/2000
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம் ஆம்பூரிலே இறந்து விட்ட இரண்டு வணிகர்களுக்கு ரூ.50,000/– ஈட்டுத் தொகை வழங்குவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	21234
	நாள்:	:	28-03-2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்.
			...வணிக நல வாரியத்திலே உறுப்பினராக இருந்தால் நிச்சயமாக வழங்கப்பட வேண்டும். அதை பற்றி இந்தக் கேள்வியின் அடிப்படையிலே விசாரிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	முதன்மை செயலாளர், தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை–5, அவர்களது கடித எண். வ.ந.வா/50/99, நாள்: 29-06-2005–ன்படி இறந்த உறுப்பினர்கள் திரு.கிருஷ்ணாஜிராவ் என்பவரின் வாரிசுக்கு ரூ.50,000/–ஐ 18-06-1999-ந் தேதியும் திரு.முகமதுகாசிம் என்பவரின் மகன் திரு.சபீர் அகமது என்பவருக்கு ரூ.20,000/–ஐ. 15-04-2000 தேதியிலும் ஈட்டுத் தொகைகள் வழங்கப்பட்டன.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம் திருபத்தூரில் உள்ள நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டித் தருவது குறித்து.

1.	வரிசை எண்.	:	4
2.	துறையின் பெயர்	:	உள் துறை
3.	உறுதிமொழி எண்.	:	217/2001
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம் திருபத்தூரில் உள்ள நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டித் தருவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	531
	நாள்:	:	07-09-2001
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. டி.கே. இராஜா
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர் ...அதை பழுது பார்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசாணை நிலை எண். 1369, உள்துறை (நீதிமன்றம்) நாள்: 09-12-2004-ல் ரூ.497இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நிறைவுற்று கட்டிடங்கள் நீதித்துறையிடம் 07-03-2007-ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில் உள்ள பாலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	5
2.	துறையின் பெயர்	:	பள்ளிக் கல்வித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	27/2002
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில் உள்ள பாலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	7093
	நாள்	:	14-03-2002
6.	உறுப்பினர் பெயர்	:	செல்வி. சி. கனகதாரா
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் அமைச்சர்	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி
			... "பரிசீலிக்கிறோம்".
8.	துறையின் பதில்	:	அரசாணை நிலை எண்.130 ப.க.(இ1) துறை, நாள்: 14-06-2007, (2007–2008) ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த ஆணை வெளியிடப்பட்டு 02-07-2007 முதல் உயர்நிலைப் பள்ளியாக செயல்பட்டு வருகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	6
2.	துறையின் பெயர்	:	உயர்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	151/2002
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	10451
	நாள்	:	12-04-2002
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. எம்.எஸ். சந்திரசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர் ...கனிவுடன் பரிசீலனை செய்யும்
8.	துறையின் பதில்	:	வேலூர் மாவட்டம், வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை எண் 101 பள்ளி கல்வி துறை நாள்: 30-06-2006-இன்படி ஆணையிடப்பட்டு 05-07-2006 முதல் மேல்நிலைப் பள்ளியாக துவக்கப்பட்டது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATURE
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி பேரம்பட்டு ஊராட்சியில் மின்கட்டண பாக்கியுள்ளதால், மின்சாரப்பணிகள் துவங்க முடியாமல் உள்ளதாலும், சில சாலைப்பணிகள் முழுமையாக நடைபெறாமல் உள்ளதாலும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து முடித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	7
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	338/2002
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி பேரம்பட்டு ஊராட்சியில் மின்கட்டண பாக்கியுள்ளதால், மின்சாரப்பணிகள் துவங்க முடியாமல் உள்ளதாலும், சில சாலைப்பணிகள் முழுமையாக நடைபெறாமல் உள்ளதாலும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து முடித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	11348
	நாள்	:	08-05-2002
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. எஸ். நடராஜன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.சி. துரைராஜ், உள்ளாட்சித்துறை அமைச்சர்
			...மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	பேரம்பட்டு ஊராட்சியில் மின் கட்டணம் அவ்வப்போது செலுத்தப்பட்டுவருகிறது. மேலும் 28-02-2007-ன்படி இவ்வூராட்சியில் நிலுவையாக இருந்த மின்கட்டணம் ரூ.1,00,651/- சமன்பாட்டு ஊக்க நிதி (மு) 12-வது நிதிக்குழு மான்யத்தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுவிட்டது. எனவே மின்கட்டணம் நிலுவை இருக்கின்ற காரணத்தினால் மின்துறை மூலம் நடைபெற வேண்டிய பணிகள் எதுவும் நிறுத்தம் செய்யப்படவில்லை. அனைத்து மின் பணிகளும் தடையின்றி நடைபெற்று வருகிறது. பேரம்பட்டு ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியம் சம்மந்தப்பட்ட அனைத்து திட்ட சாலை பணிகளும் உரிய காலத்தில் முடிக்கப்பட்டுள்ளது. நிலுவைப்பணிகள் ஏதுமில்லை என கந்திலி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) தெரிவித்துள்ளார்.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் உள்ள கற்பகம் சூப்பர் மார்க்கெட்டில் நடந்த முறைகேடுகள் பற்றி நடவடிக்கை எடுக்காமல் உள்ளது குறித்து.

1.	வரிசை எண்.	:	8
2.	துறையின் பெயர்	:	கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	346/2002
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் உள்ள கற்பகம் சூப்பர் மார்க்கெட்டில் நடந்த முறைகேடுகள் பற்றி நடவடிக்கை எடுக்காமல் உள்ளது குறித்து.
5.	தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆய்வு செய்தல்)		
	நாள் :	:	08-05-2002
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருள்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் ...உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	வாணியம்பாடியில் உள்ள கற்பகம் சூப்பர் மார்க்கெட்டில் நடந்த முறைகேடுகள் குறித்து திரு.கே.பி.எஸ். குமார் சமதாகட்சி மாநில செயலாளர் புகார் அளித்துவர். இவரிடம் விசாரணை செய்ததில் புகாருக்கான ஆதாரம் எதுமில்லை என்றும் மற்றவர்கள் கூறிய தகவலின் பேரில் புகார் அனுப்பியுள்ளதாகவும், புகாருக்கான ஆதாரம் ஏதுமில்லை என தெரிவித்துள்ளார்.மேலும் வாணியம்பாடியில் உள்ள கற்பகம் சூப்பர் மார்க்கெட்டில் இன்றைய நாள்வரையில் முறைகேடுகள் ஏதும் நடைபெற்றுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் பின்வரும் குறைபாடுகள் தெரியவந்தது. அதன் விவரம் பின்வருமாறு: (1) வாணியம்பாடியில் கற்பகம் கிளையின் மூலம் நடத்தப்படும் கடைகளுக்கு 12-11-2001-ம் தேதி தீபாவளி பண்டிகைக்கு பட்டாசு விற்பனை செய்ய ரூ.69,250/- பட்டாசு வகைகளை வாணியம்பாடி கிளை மேலாளர் திரு.எம்.சுப்பிரமணி மற்றும் திரு.ஆனந்தன், விற்பனையாளர் ஆகியோர் அனுப்பியுள்ளார்கள். இதில் ரூ. 40976.75 வசூலிக்கப்பட்டு மீதம் ரூ.24,373.25 வசூலிக்காமல் இருந்தது. இத்தொகையில் வாணியம்பாடி கிளை மேலாளர் திரு.எம்.சுப்பிரமணி ரூ.6,000/- செலுத்தியும் மீதித் தொகை ரூ.18,373.25 விற்பனையாளரால் செலுத்தப்பட்டு பொறுப்புக் கணக்கு நேர் செய்யப்பட்டுள்ளது. இருப்புக் குறைவினை தவிர்த்து இதர முறைகேடுகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நடைபெறவில்லை. பட்டாக வகைகள் ஒப்படைப்பு முறையில் பெறப்பட்டதால் இந்நேர்வில் வட்டி இழப்பு ஏதும் பண்டகசாலைக்கு ஏற்படவில்லை.

(2) வாணியம்பாடி கிளையுடன் இணைக்கப் பட்டுள்ள கற்பகம் கடை எண் 10-ல் திரு.ஏ. இக்பால்பாஷா, விற்பனையாளர் பணியாற்றி வந்தகாலத்தில் (ஆகஸ்ட் 2002 முதல் பிப்ரவரி 2003 வரை) தகுதியில்லாத கூப்பன்களுக்கு அரிசி வழங்கப்பட்ட வகையில் ரூ.42,431.60 அபராதம் விதிக்கப்பட்டு தற்காலிக பணி நீக்கம் 29-05-2003-ந் தேதியில் செய்யப்பட்டார். இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை தனியே மேற்கொள்ளப்பட்டது. இதனிடையில் திரு. ஏ. இக்பால்பாஷா, விற்பனையாளர் தனக்கு பணியிடம் வழங்கவில்லை, என தொழிலாளர் அலுவலர் முன்னிலையில் தொழில் தகராறு எழுப்பியதால் தொழிலாளர் நல அலுவலரின் 20-04-2005-ந் தேதிய அறிவுரைப்படி இவரது தற்காலிக பணிநீக்கம் ரத்து செய்யப்பட்டு அபராத தொகையினை இவரது ஊதியத்தில் மாதம் ரூ.1,000/-வீதம் பிடித்தம் செய்யும் நிபந்தனையுடன் மீண்டும் 27-08-2005-ல் பணியிடம் வழங்கப்பட்டுள்ளது. அபராத தொகை ரூ.1,000/-வீதம் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. இவரது ஒய்வுபெறும் காலம் 31-12-2022 ஆகும்.

மேற்காண் நிகழ்வுகளை தவிர இதர முறைகேடுகள் ஏதுமில்லை.

குழு ஆய்வு செய்த நாள் : 27-09-2007

குழுவின் கருத்து : படித்துப் பதிவு செய்யப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்றம் TAMILNADU LEGISLATURE
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள இடங்களில் மருத்துவப் பணியாளர்களை நியமிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	9
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	377/2002
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள இடங்களில் மருத்துவப் பணியாளர்களை நியமிப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	16973
	நாள்	:	25-10-2002
6.	உறுப்பினர் பெயர்	:	செல்வி.சி. கனகதாரா
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் நல்வாழ்வுத் துறை	:	மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் அமைச்சர்
			...காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடத்தை நேரடி நியமனம் மூலம் நிரப்ப தடையாணை உள்ளதால், விருப்பமாறுதல் முறையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இம்மருத்துவமனையில் மருந்தாளநர்களை கீழ்கண்டவாறு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது
			பானுமதி – 01-02-2007
			நிர்மல்குமார் – 19-09-2007
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டத்தில் ஒடும் பெரும்பான்மையான அரசு பேருந்துகள் பழுதடைந்துள்ளதால், பழுதடைந்த பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்படுவது குறித்து

1.	வரிசை எண்.	:	10
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	537/2003
4.	பொருள்	:	வேலூர் மாவட்டத்தில் ஒடும் பெரும்பான்மையான அரசு பேருந்துகள் பழுதடைந்துள்ளதால், பழுதடைந்த பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்படுவது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	15322
	நாள்	:	08-05-2003
6.	உறுப்பினர் பெயர்	:	செல்வி.சி. கனகதாரா
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் போக்குவரத்துத் துறை	:	மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், அமைச்சர்
			...அரசு இன்னும் கூடுதலாக புதிய அடிச்சட்டங்கள் வாங்குவதற்காக புதிய பேருந்துகள் இயக்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
8.	துறையின் பதில்	:	2003–04 ஆம் ஆண்டு முதல் 2006–07 ஆம் வரையிலான புதிய பேருந்துகள் இயக்கம் மற்றும் வயது முதிர்ந்த பேருந்துகள் கழிவு செய்யப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வ. எண்.	ஆண்டு	அடிச்சட்டங்கள் ஒதுக்கப்பட்டது	புதிய பேருந்துகள் இயக்கப் பட்டது.	பழைய பேருந்துகள் கழிவு செய்யப் பட்டது
1	2003–04	12	12	20
2	2004–05	40	40	82
3	2005–06	162	122	183
4	2006–07	97	97	116

தற்போது வேலூர் மாவட்டத்திலிருந்து இயக்கப்பட்டு வரும் நகர/புறநகர் பேருந்துகள் புதிய பேருந்துகளாக மாற்றம் செய்து புதிய பொலிவுடன் பயணிகளை கவரும் வகையில் நல்ல நிலையில் இயக்கப்பட்டு வருகிறது.

9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதிக்கு கூடுதலாக பேருந்துகள் இயக்கப்படுவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	11
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	538/2003
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதிக்கு கூடுதலாக பேருந்துகள் இயக்கப்படுவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	15322
	நாள்	:	08-05-2003
6.	உறுப்பினர் பெயர்	:	செல்வி.சி. கனகதாரா
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்
			...இன்னும் புதிய பேருந்துகள் வாங்குகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை அரசு பரிவோடு சிந்திக்கும்.
8.	துறையின் பதில்	:	தற்போது பேரணாம்பட்டு தொகுதிக்காக கீழ்க்கண்ட தடங்களில் கூடுதலாக நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.
			(1) உமராபாத்-ஆம்பூர் (வழி) சின்னவரிகம் – 2 நடைகள்
			(2) ஆம்பூர்-வாணியம்பாடி (வழி) மிட்டாளம், உதயேந்திரம் – 2 நடைகள்
			(3) பேரணாம்பட்டு – அரவட்லா – 6 நடைகள்
			(4) பேரணாம்பட்டு – சாரங்கல் (வழி) மசிகம் – 4 நடைகள்
			(5) பேரணாம்பட்டு – பாத்தப்பாளையம் – 4 நடைகள் (வழி) குண்டலப்பள்ளி, கோக்கலூர்
			(6) பேரணாம்பட்டு – வாணியம்பாடி (வழி) மிட்டாளம், உதயேந்திரம் – 3 நடைகள்
			(7) பேரணாம்பட்டு – ஆம்பூர் (வழி) பாலூர், உமராபாத் – 3 நடைகள்
			(8) அரங்கல் துருகம் – ஆம்பூர் (வழி) மலையாம் பட்டு – 3 நடைகள்
			(9) அரங்கல் துருகம் – கட்டகுண்டா – 4 நடைகள்
			(10) அரங்கல் துருகம் – வாணியம்பாடி (வழி) ஈச்சம் பட்டு – 5 நடைகள்
9.	குரு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குருவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE

வேலூர் மற்றும் வேலூர் மாவட்டத்தின் பல ஊர்களில் பொது மக்களுக்கு போதிய குடிநீர் வழங்கப்படாதது குறித்து.

1.	வரிசை எண்.	:	12
2.	துறையின் பெயர்	:	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
3.	உறுதிமொழி எண்.	:	588/2003
4.	பொருள்	:	வேலூர் மற்றும் வேலூர் மாவட்டத்தின் பல ஊர்களில் பொது மக்களுக்கு போதிய குடிநீர் வழங்கப்படாதது குறித்து.
5.	கவன ஈர்ப்புத் தீர்மானம்		
	நாள்	:	10-05-2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்
			...தற்போது நிலவும் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ்/கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.
துறையின் பதில்		:	வேலூரில் 2001-ல் மக்கள் தொகை கணக்கீட்டின் படி 177413 ஆகும். தற்சமயம் வேலூர் நகராட்சி சத்துவாச்சாரி கூட்டு குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளது
			பொன்னை தெங்கால்
			தலைமையிடத்தில் : 4.07 MLD குடிநீரும்
			பாலாறு தலைமை : 6.12 MLD குடிநீரும்
			கருகம்புத்தூர் : 2.51 MLD குடிநீரும்
			ஒட்டேரி : 0.56 MLD குடிநீரும்
			இதர பவர்பம்புகள் : 0.33 MLD குடிநீரும்.
			ஆக மொத்தம் 13.59 MLD குடிநீர் வேலூர் நகரமக்களுக்கு வழங்கப்படுகிறது. குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 75 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPH

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட இரத்த வங்கி செயல்படாமல் உள்ளதை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	13
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	604/2003 & 701/2003
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட இரத்த வங்கி செயல்படாமல் உள்ளதை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	18783/ (ம) 18494
	நாள்	:	10-05-2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.டி.கே. ராஜா (ம) திரு.எஸ். நடராஜன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு (ம) கல்வித் துறை அமைச்சர்
			...உரிமம் தொகை செலுத்தியபின் இந்த ரத்தம் வங்கிக்கு உரிமம் பெற்று செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	15-09-2004 முதல் உரிமம் (எண். 246 நாள்: 15-09-2004) பெற்று செயல்பட்டு வருகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம் வேலூர் நகரிலுள்ள சைதாப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி, அரியூர் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதால் மாணவர்கள் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

1.	வரிசை எண்.	:	14
2.	துறையின் பெயர்	:	பள்ளிக் கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	899/2003
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம் வேலூர் நகரிலுள்ள சைதாப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி, அரியூர் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதால் மாணவர்கள் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.
5.	கவன ஈர்ப்புத் தீர்மானம் நாள்	:	05-11-2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.செ. செம்மலை, கல்வி அமைச்சர் ...இதைத் தவிர இப்பள்ளியில் காலியாகவுள்ள கணக்குப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் ஒன்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடம் இரண்டும் 10 நாட்களுக்குள் நடைபெறவுள்ள ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வின் போது நிரப்பப்படும்.
8.	துறையின் பதில்	:	வேலூர் மாவட்டம், வேலூர் சைதாப்பேட்டை கே.ஏ.கே.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி அனுமதியிக்கப்பட்ட பணியிடங்கள் அனைத்தும் பூர்த்திச் செய்யப்பட்டது. காலிப் பணியிடம் ஏதுமில்லை. அரியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் கைத்தொழில் ஆசிரியர் பணியிடம் மட்டும் காலியாக உள்ளது. இதர பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

வேலூர் மாவட்டம் வேலூர் நகராட்சி மீன் மார்க்கெட் கழிவுகளை நகரில் பைபாஸ் ரோட்டில் சேர்த்து வைத்து உரமாக்கும் இடத்தில் துர்நாற்றம் அதிகமாகி சுகாதார கேடு விளைவிப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

1.	வரிசை எண்.	:	15
2.	துறையின் பெயர்	:	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
3.	உறுதிமொழி எண்.	:	904/2003
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம் வேலூர் நகராட்சி மீன் மார்க்கெட் கழிவுகளை நகரில் பைபாஸ் ரோட்டில் சேர்த்து வைத்து உரமாக்கும் இடத்தில் துர்நாற்றம் அதிகமாகி சுகாதார கேடு விளைவிப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.
5.	கவன ஈர்ப்புத் தீர்மானம்		
	நாள்	:	07-11-2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்
			...தற்போதுள்ள பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர சதுப்பேரியில் ஒரு நிரந்தர உர கொட்டகை கட்ட நகராட்சி உத்தேசித்துள்ளது.
8.	துறையின் பதில்	:	வேலூர் நகராட்சி மீன் கழிவுகள் அனைத்தும் பைபாஸ் ரோட்டில் இருந்து லாரிகள் மற்றும் ஜே.சி.பி. மூலம் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. மேலும் மீன் கழிவுகளை சேராதவண்ணம் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படுகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வேலூர் மாவட்டம் சோளிங்கர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு முன் வருமா என்பது குறித்து

1.	வரிசை எண்.	:	16
2.	துறையின் பெயர்	:	நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
3.	உறுதிமொழி எண்.	:	181/2004 (ம) 293/2005
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம் சோளிங்கர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு முன் வருமா என்பது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	22878 (ம) 8741
	நாள்	:	27-07-2004 (ம) 29-03-2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. இரா. வில்வநாதன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ...அரசானது இதைப் பற்றி சிந்திக்கும்.
8.	துறையின் பதில்	:	1. இப்பேரூராட்சி வேலூர் மாவட்டத்தில் உள்ளது. இப்பேரூராட்சி 9.5ச.கி.மீ. பரப்பளவும், சோளிங்கர், கொண்டபாளையம், பில்லாஞ்சி, மோட்டூர், இசையனூர் காலனி ஆகிய ஐந்து வருவாய் கிராமங்களையும், 18 வார்டுகளையும் உள்ளடக்கிய பகுதியாகும். மேலும், இப்பேரூராட்சி அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதியிலும், சோளிங்கர் சட்டமன்ற தொகுதியிலும் உள்ளது. 2. இப்பேரூராட்சியில் திட்டப் பணிகள் நீங்கலாக சொந்தமான ஆண்டுவருமானம், 2006–07–ம் ஆண்டில் வரவினம் கீழ்கண்டவாறு உள்ளது. அ. சொத்துவரி ஆண்டுக்கு ரூ.23.550லட்சம் ஆ. தொழில்வரி ஆண்டுக்கு ரூ. 7.880 லட்சம் இ. குடிநீர் கட்டணம் வசூல் ரூ. 16.580 லட்சம் ஈ. வரிமில்லா இனங்கள் ரூ. 59.890 லட்சம் ஆக மொத்தம் ரூ.107.900லட்சம் 3. இப்பேரூராட்சியின் மக்கள் தொகை 2001–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 26652 (ஆண்–13527, பெண்–13125) மக்கள் தொகை கொண்டுள்ளது.பேரூராட்சியின் மக்கள் தொகை 30,000–க்கு மேல் இருந்தால்தான் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்த இயலுமென அரசாணையில் உள்ளது. இப்பேருராட்சியின் மக்கள் தொகை2001–ன் கணக்கெடுப்பின்படி 26652 மக்கள் தொகையினை கொண்டுள்ளதால், சோளிங்கர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த இயலாது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது

வேலூர் மாவட்டம் குடியாத்தம், பெங்களூர் சாலையில் தடம் எண்.444ஜி பேருந்துகளும் காஞ்சிபுரம் பெங்களூர் சாலையில் செல்லும் தடம் எண்.666 பேருந்துகளும் புதிய பேருந்துகளாக மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்து

வரிசை எண்.	:	17
துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
உறுதிமொழி எண்.	:	259/2004
பொருள்	:	வேலூர் மாவட்டம் குடியாத்தம், பெங்களூர் சாலையில் தடம் எண்.444ஜி பேருந்துகளும் காஞ்சிபுரம் பெங்களூர் சாலையில் செல்லும் தடம் எண்.666 பேருந்துகளும் புதிய பேருந்துகளாக மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்து
உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	18009
நாள்	:	30-07-2004
உறுப்பினர் பெயர்	:	செல்வி சி. கனகதாரா
மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து துறை அமைச்சர்
		...விழுப்புரம் போக்குவரத்து கோட்டத்தில் உள்ளடங்கிய அந்த பேரணாம்பட்டு தொகுதிக்கும் அதிலே தேவைக்கேற்ப நிச்சயமாக புதிய பேருந்துகள் வழங்கப்படும்
துறையின் பதில்	:	தடம் எண் 444ஜி மற்றும் தடம் எண் 666 ஆகிய தடங்களில் தற்போது புதிய பேருந்துகள் தான் இயக்கப்பட்டு வருகிறது. தடம் எண். 444ஜி குடியாத்தம்–பெங்களூர் தடத்தில் 01-10-2005 முதல் டி.எண். 23/எண். 1586 மற்றும் டி.என். 23/எண். 1587 ஆகிய இரு புதிய பேருந்துகளும், தடம் எண் 666காஞ்சிபுரம்–பெங்களூர் தடத்தில் 14-06-2004 முதல் டி.எண். 32, எண். 2065 மற்றும் டி.எண். 32 எண் 2066, ஆகிய இரு புதிய பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.
குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது

வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி பேரூராட்சி பேருந்து நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத் தருதல் குறித்து

1.	வரிசை எண்.	:	18
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	461/2004
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி பேரூராட்சி பேருந்து நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத் தருதல் குறித்து
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	40920
	நாள்	:	17-11-2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.எஸ். நடராசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் (மு) உள்ளாட்சித் துறை அமைச்சர்
			...நிதி நிலை சீரான பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
8.	துறையின் பதில்	:	வாணியம்பாடி கிருஷ்ணகிரி நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள நாட்றாம்பள்ளி பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்ட தினசரி அங்காடி மற்றும் நாட்றாம்பள்ளி சட்டமன்ற தொகுதி அலுவலகத்திற்கு எதிரில் உள்ள பேரூராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் பேருந்து நிலையம் சர்வே எண்.318-ல் சுமார் 24,000 சதுர அடி பரப்பு அளவு காலியாக உள்ளது. இதனை சுற்றி நெடுஞ்சாலை துறை சம்மந்தப்பட்ட சாலைகள் செல்கிறது. மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு சுற்றுச்சுவர் கட்டும் பகுதியில் திருப்பத்தூர் செல்லும் சாலையில் நெடுஞ்சாலை துறையின் மூலம் சாலை விரிவுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் மேற்படி இடத்தில் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் கட்டுவதற்கு கன்சல்டன்ட் மூலம் மதிப்பீடு மற்றும் வரைப்படம் தயாரிக்க பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி மதிப்பீடு தொகைக்கு டுப்பிட் கோ (Tubitco) நிதி நிறுவனம் மூலம் நிதியினை பெற்று பணிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது சுற்றுச்சுவர் கட்டுவதற்கு சாத்யமில்லை.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	27-09-2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது

வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி தொகுதியில் மாணவர்கள் விடுதி, ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதிகள் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தரப்படுமா என்பது குறித்து

1.	வரிசை எண்.	:	19
2.	துறையின் பெயர்	:	ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	487/2004
4.	பொருள்	:	வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி தொகுதியில் மாணவர்கள் விடுதி, ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதிகள் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தரப்படுமா என்பது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	49083
	நாள்	:	18-11-2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.எஸ். நடராசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. சொ.கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்
			...தக்க நடவடிக்கை எடுக்கப்படும்
